Royal College of Anaesthetists

# மயக்க மருந்தின் பொதுவான நிகழ்வுகள் மற்றும் அபாயங்கள்

**இயல்பான எடை கொண்ட ஆரோக்கியமான வயது வந்த நோயாளிகள் வழக்கமான அறுவை சிகிச்சைக்காக ஒரு பொது மயக்க மருந்து எடுத்துக் கொள்ளும்போது, எதிர்கொள்ளும் பொதுவான நிகழ்வுகள் மற்றும் அபாயங்களை இந்தப் பிரிவிலுள்ள விளக்கப்படம் காட்டுகிறது. (சிறப்பு அறுவை சிகிச்சைகள் வேறு அபாயங்களைக் கொண்டிருக்கலாம்).**

நவீன மயக்க மருந்துகள் மிகவும் பாதுகாப்பானவை. மயக்க மருந்துகள் அல்லது பயன்படுத்தப்படும் உபகரணங்களிலிருந்து சில பொதுவான பக்க விளைவுகள் உள்ளன, அவை பொதுவாக தீவிரமானவை அல்லது நீண்ட காலம் நீடிப்பவை அல்ல. ஆபத்து தனிநபர்களிடையே மாறுபடும் மற்றும் பயன்படுத்தப்படும் செயல்முறை மற்றும் மயக்க மருந்தின் நுட்பத்தை சார்ந்தது. உங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அவர்கள் நினைக்கும் அபாயங்களை, உங்களுடைய மயக்க மருந்து நிபுணர் உங்களுடன் கலந்தாய்வு செய்வார்.

சில அடிக்கடி நேராத பொது அபாயங்களை உங்களுக்கு அதிக ஆபத்து இல்லாத போது, மயக்கமருந்து வல்லுநர் உங்களுடன் பொதுவாக கலந்தாலோசிக்க மாட்டார். இவை இந்த அட்டையில் காட்டப்படவில்லை.

---

மிகவும் பொதுவானது -அதிகப்படியாக 10ல் ஒருவருக்கு
உங்கள் குடும்பத்தில் ஒரு நபருக்கு இருப்பதற்குச் சமமானது

- உடல் நலமின்மை
- நடுக்கம்
- தாகம்*
- புண்பட்ட தொண்டை
- சிராய்ப்பு
- தற்காலிகமாக நினைவு இழப்பு (அனேகமாக 60 வயது மேற்பட்டவர்களுக்கு)

---

பொதுவானது-இடையில் 10ல் ஒன்றிற்கும் மேலும் 100ல் ஒன்றிற்கும் ஒரு
வீதியில் ஒருவருக்குச்சமம்

- ஊசி போட்ட இடத்தில் வலி*
- உதடு அல்லது நாக்கில் சிறிய காயம்

---

வழக்கத்திற்கு மாறானது-மத்தியில் 100ல் ஒருவர் மற்றும் 1,000ல் ஒருவர்
ஒரு கிராமத்தில் ஒரு நபருக்குச் சமம்

- நரம்பில் சிறிய காயம்

---

அரியது- மத்தியில் 1000ல் ஒன்றிற்கும் மற்றும் 10,000ல் ஒன்றிற்கும்
ஒரு சிறிய நகரத்தில் ஒரு நபருக்கு இருப்பதற்குச் சமம்

- 1,000ல் ஒருவருக்குக் நிரந்தரமான வெளிப்புற நரம்புச் சேதம்
- 2,800 பேரில் ஒருவருக்குக் கருவிழி சிராய்ப்பு (கண்ணில் கீறல்)
- 4,500 பேர்களில் ஒருவருக்குக் சிகிச்சைத் தேவைப்படும்படி பற்களுக்கு சேதம்
- 10,000ல் ஒருவருக்குக் அனாபிலாக்ஸிஸ் (கடும் ஒவ்வாமை மருந்திற்கு எதிர் விளைவு)

---

மிக அரிது - 10,000ல் ஒருவர் இருந்து 100,000 ஒருவருக்கு அல்லது அதற்கு மேல்
ஒரு பெரிய நகரத்தில் ஒருவருக்கு இருப்பதற்குச் சமம்

நாம் எல்லோரும் வழக்கமான வாழ்க்கையில் எதிர்படும் அபாயங்கள், சாலையில் பயணம் செய்வது போன்றவை மிக அதிகமானது கீழ்கண்ட அபாயங்களைவிட.

- 20,000ல் ஒருவர் மயக்க மருந்து எடுத்துக்கொண்ட நிலையிலும் நினைவுடனிருப்பது
- 100,000ல் ஒருவருக்குக் கண் பார்வை இழப்பு
- 100,000ல் ஒருவருக்கு மயக்கமருந்து எடுத்துக் கொண்டதன் நேரடி விளைவாக மரணம்

* முதல் ஸ்பிரிண்ட் தேசிய மயக்க மருந்து திட்டம் (எஸ்என்ஏபி -1) ஆய்வு. Br J Anaesth 2016 (https://academic.oup.com/bja/article/117/6/758/2671124).

---